[2nd November 1962

THE HON. SRI P. KAKKAN : (a) No, Sir.

(b) Does not arise.

காடுகள் (உளுந்தூர்பேட்டை)

* 1136 கேள்வி.—கு. கோபால கவுண்டர் : கனம் கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) உளுந்தூர்பேட்டை வட்டாரத்திலிருக்கும் காடுகளை வெட்டிச் செல்ல, கண்ட்ராக்டுக்கு விடப்பட்டதா ?

(இ) அதன் மூலம் அரசாங்கத்திற்கு கிடைத்த மொத்த தொகை எவ்வளவு ?

(உ) எவ்வளவு காலம்வரை கண்ட்ராக்டர்கள் மரங்களை வெட்டிச் செல்லும் உரிமை வழங்கப்பட்டிருக்கிறது ?

கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்றாடியார் : (அ) ஆம், ஐயா.

(இ) 1957-58-லிருந்து 1962-63 வரை கிடைத்த தொகை ரூ. 11,177.

(உ) ஒவ்வொரு வருடமும் எட்டு மாதங்கள்—அதாவது ஏப்ரல் முதல் தேதியிலிருந்து நவம்பர் 30-ம் தேதி வரை.

*Text Books (Standardization)*

* 1137 Q.—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Finance be pleased to state the progress made so far regarding standardization of text books for the primary school classes?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Text books in English for Standards V, VI and VII; Text books in Tamil, Telugu, Malayalam, Urdu and Non-detailed Text-Books in English, Tamil, Telugu, Malayalam and Urdu for Standard VII have been published by the Government so far.

விசாரணைக் கைதி (மரணம்)

* 1138 கேள்வி.—திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : கனம் நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திராவிட முன்னேற்றக் கழகத்தின் விலைவாசி குறைப்பு போராட்டத்தில் கைது செய்யப்பட்டு விசாரணைக் கைதியாக மதுரை மத்திய சிறையில் வைக்கப்பட்டிருந்த எவரேனும் மரணமடைந்தாரா ?

(இ) அப்படியானால், அவர் இறந்ததின் காரணமென்ன ?